# காஞ்சிபுரம் பெருநகராட்சி
## கூட்ட எண்.6/2021-22

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடந்த அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை**
**திருமதி.சா. லெட்சுமி, எம்.காம்.,**
**தனி அலுவலர்**

1. காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்திட சட்டப்பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் 24.08.2021-ம் தேதிய அறிவிப்பினை தொடர்ந்து, அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் காணொலி வாயிலான 26.08.2021 அன்றைய ஆய்வுக் கூட்டத்தின் அறிவுரைக்கிணங்க, மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலை தொடர்ந்து காஞ்சிபுரம் நகராட்சி எல்லைப் பகுதியினை சுற்றியுள்ள காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோனேரிக்குப்பம், திருப்பருத்திக்குன்றம், கருப்படிதட்டடை, கீழ்கதிர்பூர், சிறுகாவேரிப்பாக்கம், திம்மசமுத்திரம், கீழம்பி, புத்தேரி ஆகிய 8 கிராம ஊராட்சிகளையும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட களியனூர், வையாவூர் மற்றும் ஏனாத்தூர் ஆகிய 3 கிராம ஊராட்சிகளையும் ஆக மொத்தம் 11 கிராம ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்திட உரிய பிரேரணை அரசுக்கு அனுப்பி மாநகராட்சியாக தரம் உயர்த்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் காஞ்சிபுரம் நகரம் 01.11.1866-ல் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அதன் பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.651, நாள்.09.05.1983 இல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, மேலும் அரசாணை எண்.238, நாள்.02.12.2008 இன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 11.72 ச.கி.மீ. பரப்பளவில் 45 வார்டுகளாக செயல்படுத்தப்பட்டிருந்த நிலையில், அரசாணை(நிலை) எண்.277, நாள்.09.11.2010 இன்படி செவிலிமேடு பேரூராட்சி, ஓரிக்கை, நத்தப்பேட்டை மற்றும் தேனம்பாக்கம் ஊராட்சி பகுதிகளை இந்நகராட்சியுடன் இணைத்ததன் வாயிலாக 36.14 ச.கி.மீ. பரப்பளவில் 51 வார்டுகளைக் கொண்டு பெரு நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

தற்போது காஞ்சிபுரம் நகராட்சி பகுதியினை சுற்றியுள்ள ஊராட்சிகளை இணைப்பதால் அண்ணா பல்கலைக்கழக கிளை கல்லூரி, பொறியியல் கல்லூரிகள், சங்கரா நிகர்நிலை

பல்கலைக்கழகம், அண்ணா புற்றுநோய் மருத்துவமனை, L & T நிறுவனம், AUDCO நிறுவனம், அரிசி ஆலைகள், விசைத்தறி நிறுவனங்கள், சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு வளாகம், தமிழ்நாடு அரசின் பட்டு வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (TANSILK) மற்றும் அடர்ந்த குடியிருப்பு பகுதிகளை உள்ளடக்கியதாக அமைவதால் நகரின் பரப்பளவு 110.87 ச.கி.மீ. கொண்டதாகவும், தற்போதைய நகரட்சியின் வருமானம் ரூ.78.66 கோடியிலிருந்து ரூ.82.00 கோடியாக உயரும். எனவே காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கோனேரிக்குப்பம், திருப்பருத்திக்குன்றம், கருப்படித்தட்டடை, கீழ்கதிர்பூர், சிறுகாவேரிப்பாக்கம், திம்மசமுத்திரம், கீழம்பி, புத்தேரி ஆகிய 8 கிராம ஊராட்சிகளையும் மற்றும் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட களியனூர், வையாவூர் மற்றும் ஏனாத்தூர் ஆகிய 3 கிராம ஊராட்சிகளையும் இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்த மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு :- (ந.க.எண்.7554/2021/எப்1)

1. காஞ்சிபுரம் பெருநகராட்சியுடன் 11 கிராம ஊராட்சிகளை இணைப்பதால், எதிர்வரும் காலங்களில் நகராட்சிப் பகுதியில் திட்டங்களை செயல்படுத்த தேவையான இடவசதி கிடைக்கும்.
2. நகராட்சி வருமானம் ரூ.78.66 கோடியிலிருந்து ரூ.82.00 கோடியாக உயரும்.
3. நகராட்சியுடன் இணைக்கும் கிராம ஊராட்சிகளிலுள்ள மக்கள் பயன்பெரும் வகையில் திட்டங்கள் செயல்படுத்திட இயலும்.

**தீர்மானம் எண்:- 69 அனுமதி வழங்கப்படுகிறது**

நகராட்சி அலுவலகம்.<br>
காஞ்சிபுரம்.<br>
**நாள்:- 31.08.2021.**

(ஒம்) சா. லெட்சுமி,<br>
தனி அலுவலர்,<br>
காஞ்சிபுரம் பெருநகராட்சி

// உண்மை நகல் //

ஆணையளர்<br>
காஞ்சிபுரம் பெருநகராட்சி